(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

NFWC

**பொருளியல்**
**Economics**

| Three Hours | 21 | T | I |
|---|---|---|---|
| Gr -13 (2023) | | | |

**அறிவுறுத்தல்கள் :-**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

## பகுதி I

**01)** பொருளியல் என்பதன் வரைவிலக்கணம்.
(1) சமூகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி மனிதனின் பௌதீகத் தேவைகளையும் உளவியல் தேவைகளையும் பூர்த்தி செய்ய மேற்கொள்ளும் செயற்பாடு.
(2) மாற்றுப் பயன்பாடுடைய அருமையான வளங்களுக்கும் எல்லையற்ற மனித விருப்பங்களுக்கும் இடையிலான தொடர்பு.
(3) பொருளாதாரப் பிரச்சினைகளை ஆய்வு செய்வது.
(4) பொருளாதாரத்தின் மொத்த ரீதியான ஆய்வு.
(5) நடைமுறை உலகில் என்ன நடைபெறுகின்றது என்பதை யதார்த்தமான முறையில் விளக்கும் செயற்பாடு.

**02)** நிலத்தின் பொருளியல் பண்பாக அமைவது.
(1) நிலத்தின் நிரம்பல் நெகிழ்வுள்ளது.
(2) நிலத்திற்கு வழங்கப்படும் விலையின் ஓர் அதிகரிப்ப நிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
(3) நிலம் அசையும் தன்மை வாய்ந்தது.
(4) நிலத்தின் நிரம்பல் நிலையானது.
(5) நிலத்திற்காக சமூகத்திற்கு உற்பத்தி செலவு ஏற்படும்.

**03)** ஊக்குவிப்பின் இயல்புகள் எனும் நியதிக்கு அமைய பொருளாதார அமைப்புக்களை பல வகைப்படுத்தலாம். அதன் அடிப்படையில் சந்தைப் பொருளாதாரமொன்றின் ஊக்குவிப்பு வகையாக அமைவது.
(1) பொருள் ரீதியான ஊக்குகள்.
(2) அதிகாரம் மூலமான ஊக்குவிப்புக்கள்.
(3) ஒழுக்கவிழுமியம் சார்ந்த ஊக்குவிப்புக்கள்.
(4) சமூக நலன் தொடர்பான ஊக்குவிப்புக்கள்.
(5) கட்டளை தொடர்பான ஊக்குவிப்புக்கள்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)


**04)** மத்திய திட்டமிடற் பொருளாதார முறைமையின் ஒரு முக்கிய பண்பாக அமைவது.
(1) விலைப்பொறிமுறை மூலம் அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப்படும்.
(2) தனியார் சொத்துடமை காணப்படுதல்.
(3) வருமானம் மற்றும் செல்வம் என்பன சமமற்ற விதத்தில் பங்கீடு செய்யப்படுவதாகும்.
(4) பொருள்களையும் சேவைகளையும் எவ்வாறு உற்பத்தி செய்யலாம் என்பது பற்றிய தீர்மானங்கள். அரசாங்க கொள்கை வகுப்பாளர்களால் மேற்கொள்ளப்படும்.
(5) அரசாங்கத் தலையீடு குறைவு.

**05)** திட்டமிட்ட பொருளாதாரமொன்றில் யாருக்கு உற்பத்தி செய்வது? என்ற வினா பிரதானமாக.
(1) போட்டிச் சந்தைகளில் வருமானக் கொடுப்பனவுகளுக்காக சாதனங்களின் விற்பனையால்.
(2) சமூக வழக்காறுகளைக் கையாண்டு, சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு உற்பத்தியை பங்கீடு செய்வதனூடாக.
(3) குறைந்த வருமானம் உழைப்போருக்கு பொருட்களையும் சேவைகளையும் விலைகளையும் அரசாங்கம் தானே நிர்ணயிப்பதனூடாக.
(4) அரசாங்கம் பொருளாதாரத் திட்டமொன்றின் அங்கமாக வேதனங்களையும் விலைகளையும் தானே நிர்ணைத்தலினூடாக.
(5) தொழில் கொள்வோருக்கும் தொழில் வழங்குனருக்குமிடையே பேரம் பேசலினூடான நிர்ணயிக்கப்படும்.

**06)** உற்பத்தி இயல்தகவு வளையியின் உட்புறமுள்ள புள்ளியொன்றிலிருந்து உற்பத்தி சாத்திய வளையியை நோக்கிய ஓர் அசைவு மூலம் காட்டப்படுவது.
(1) வேலையின்மையால் ஏற்படும் வீழ்ச்சி.
(2) வேலையின்மை.
(3) வேலையின்மை அதிகரித்தல்.
(4) அமையச் செலவு இன்றி ஒரு பொருளின் உற்பத்தியைக் குறைத்தல்.
(5) உற்பத்தி வினைத்திறன்.

**07)** வளங்கள் சகல பொருளாதார நடவடிக்கைகளிலும் ஒன்றுக்கொன்று பூரண பதிலீட்டுத் தன்மை அற்றதாக காணப்படும் போது பின்வருவனவற்றுள் எது உண்மையாகும்?
(1) வளங்களின் அருமைத்தன்மை இல்லாமற் போகும்.
(2) உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு நேர் கோடாகும்.
(3) சகல பொருள்களினதும் வெளியீட்டை அதிகரிக்க முடியும்.
(4) உற்பத்தி இயல்தகவு வளையி உற்பத்தி தானத்துக்கு குழிவு வடிவமாகும்.
(5) உற்பத்தி இயல்தகவு வளையி உற்பத்தி தானத்துக்கு குவிவு வடிவமாகும்.

**08)** X மற்றும் Y பொருளை உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி சாத்திய வளையி பின்வரும் வரைபடம் மூலம் காட்டப்பட்டுள்ளது.





மேலுள்ள உற்பத்தி சாத்திய எல்லை வளைகோட்டுக்கு பொருத்தமான மிகச் சரியான கூற்றை பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க.
(01) ஒரே இன வளங்கள் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டன.
(02) உற்பத்தியில் சம அளவான தொழிலுட்பமுறை பயன்படுத்தப்பட்டன.
(03) ஓரினத்தன்மை அல்லாத வளங்கள் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டன.
(04) வளங்களின் விளைதிறனில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
(05) ஒரு தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வளங்கள் மற்றைய தொழிலிலும் அதே வீதத்தில் ஈடுபடுத்தப்பட முடியும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**09)** குறித்த பண்டமொன்றின் விலை அதிகரிக்கும் போது அதன் கேள்வியினளவு குறைவதில் செல்வாக்குச் செலுத்தும் வருமான விளைவு தொடர்பான கூற்று.
(1) சார்பு விலை குறைந்த பண்டங்களை நுகர்வோர் நாடுதல்.
(2) பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது மெய்வருமானம் அதிகரித்தல்.
(3) குறித்த பண்டத்தின் விலை எதிர்காலத்தில் குறையும் என்ற எதிர்பார்ப்பில் கேள்வியைக் குறைத்தல்.
(4) பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது மெய்வருமானம் வீழ்ச்சியடைதல்.
(5) பண்டத்தின் விலை அதிகரிப்பின் போது பண வருமானம் குறைந்து கேள்வி குறைவடைதல்.‘

**10)** போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் சந்தைக் கேள்வி, நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளினால் வெளிப்படுத்தப்படுவதாக கருதுக.
$Qd = 80 - 2p$ $Qs = -20 + 2p$
சந்தைச் சமநிலையின் போது விலைக்கேள்வி நெகிழ்ச்சி.
(1) -2.4 (2) -1.67 (3) 3.0 (4) -1.0 (5) -0.60

**11)** அரிசிக்கான சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் மாற்றம் காரணமாக சந்தை சமநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை கீழே உள்ள வரைபடம் காட்டுகின்றது.




சந்தைச் சமநிலை விலை P யிலிருந்து P1 ஆக அதிகரித்தமைக்கான காரணம் பின்வருவனவற்றில் எது?
(1) உரத்தின் விலை அதிகரித்தமையும், பாணின் விலை குறைந்தமையும்.
(2) உரமானியம் அகற்றப்பட்டமையும் அரிசிக்கான நுகர்வோர் சுவை அதிகரித்தமையும்.
(3) உரமானியம் அதிகரித்தமையும் பாணின் விலை கூடியமையும்.
(4) உரமானியம் அகற்றப்பட்டமையும் அரிசிக்கான நுகர்வோர் சுவை குறைந்தமையும்.
(5) உரத்தின் விலை அதிரகரிப்பும் அரிசிமா இடியப்பத்துக்கான விலை கூடியமையும்.

**12)** நிரம்பல் கோட்டின் மேல் நோக்கிய அசைவு காரணமாக.
(1) நிரம்பல் கோடு வலப்புறம் நகர்வடையும்.
(2) நிரம்பல் கோடு இடம்புறம் நகர்வடையும்.
(3) நிரம்பல் தொகை அதிகரிக்கும்.
(4) நிரம்பல் தொகை குறைவடையும்.
(5) சந்தை சமநிலை அதிகரிக்கும்.

**13)** பின்வருவனவற்றுள் நிரம்பல் கோட்டின் இடப்புற நகர்வுக்கு காரணமாக அமைவது.
(1) உள்ளீட்டுப் பொருட்களின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி.
(2) தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படல்.
(3) தொடர்புடைய பண்டத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்படல்.
(4) தொடர்புடைய பண்டத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்படல்.
(5) உற்பத்தியாளர் எண்ணிக்கை அதிகரித்தல்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**14)** x பொருளொன்று நிரம்பல் சார்பு Qs = 10 p எனத் தரப்பட்டுள்ளது. இச் சமன்பாட்டின் படி x பண்டத்துக்கான நிரம்பல் நெகிழ்ச்சி யாது?
(1) 2.0 (2) 1.67 (3) 1.00 (4) 0.82 (5) 3.0

**15)** பின்வரும் அட்டவணை A, B, C, D, E என்ற ஐந்து வேறுபட்ட பொருட்களுக்கு இருவேறு வருமான மட்டங்களில் ஒரு வீட்டுத்துறையானது கேள்வியைக் காட்டுகின்றது.


| வருமானம் | கேட்கப்பட்ட பண்ட அலகுகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E |
| ரூ. 10 000 | 200 | 200 | 200 | 200 | 200 |
| ரூ. 12 000 | 200 | 240 | 260 | 280 | 300 |

மேலே தரப்பட்ட வருமான வீச்சில் எந்தப் பண்டத்திற்கு வீட்டுத்துறையின் வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி ஒருமையாகவிருக்கும்.
(1) A (2) B (3) C (4) D (5) E

**16)** குறித்த பொருள் தொடர்பான கேள்வி, மிகைக்கேள்வி சமன்பாடுகள் பின்வருமாறு.
Qd = 2200 – 40 p
Ed = 1800 – 120 p
இப் பண்டத்தின் சமநிலை விலை, தொகை முறையே.
(1) ரூ 15, 1600 அலகுகள் (2) ரூ 15, 1800 அலகுகள் (3) ரூ 30, 1000 அலகுகள்
(4) ரூ 20, 1200 அலகுகள் (5) ரூ 30, 1600 அலகுகள்

**17)** ரயருக்கான கேள்வி பூரண நெகிழ்வற்றதாகவும் நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளதாகவும் இருப்பதாக கருதுக. இந்நிலைமையில் ரயர் மீது விதிக்கப்படும் ஓர் உற்பத்தி வரியானது.
(1) கொள்வனவாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(2) விற்பனையாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(3) கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர் மீது சமனான சமையினை ஏற்படுத்தும்.
(4) கொள்வனவாளர் மீது முழு வரிச்சுமையினை ஏற்படுத்தும்.
(5) விற்பனையாளர் மீது முழு வரிச்சுமையினை ஏற்படுத்தும்.

**18)** போட்டிச் சந்தை ஒன்றில் 1kg அரிசிக்கு ரூ20.00 மானியம் வழங்கியதன் பின் நிரம்பல் கோடு வலப்புறம் நகரவடைந்ததை கீழே உள்ள வரைபடம் காட்டுகின்றது.




அலகு மானியம் வழங்கியதன் பின் உற்பத்தியாளர் வருமானம் உற்பத்தியாளன் மிகை என்பவற்றின் பெறுமதி யாது?

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

| | **உற்பத்தியாளர் வருமானம் (ரூபா)** | **உற்பத்தியாளர் மிகை (ரூபா)** |
|---|---|---|
| *(1)* | *3800* | *400* |
| *(2)* | *2100* | *900* |
| *(3)* | *3000* | *900* |
| *(4)* | *1800* | *900* |
| *(5)* | *1600* | *400* |

**19)** நாடொன்றில் உருளைக் கிழங்குக்கான உள்நாட்டுச் சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

Qd = 400 – 4p

Qs = -100 + 6p

அத்துடன் அந்நாட்டின் உருளைக்கிழங்குகளுக்கான சந்தை சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்படுவதாகவும் உருளைக்கிழங்கின் உலகவிலை 1 kg இற்கு ரூபா 40 எனவும் கருதுக. நாடு சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்பட்ட பின் உள்நாட்டுக்கேள்வி மற்றும் உள்நாட்டு நிரம்பல் என்பன முறையே.

*(1) 240, 240 அலகுகள்* *(2) 240, 140 அலகுகள்* *(3) 100, 140 அலகுகள்*
*(4) 200, 200 அலகுகள்* *(5) 40, 100 அலகுகள்*

**20)** குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு.

Qd = 240 – 2p Qs = -210 + 3p

இப் பண்படத்தின் மீது ரூ *100.00* குறைந்தபட்ச விலை விதித்து மிகை நிரம்பலை அரசு கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது. இக் கொள்கையின் படி உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம் சமூக நலனில் ஏற்படும் பாதிப்பை சரியாக காட்டும் விடை யாது?

| உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம் | சமூக நலனில் ஏற்படும் பாதிப்பு |
|---|---|
| *(1) 1250 ஆல் கூடும்* | *375* |
| *(2) 750 ஆல் குறையும்.* | *2000* |
| *(3) 750 ஆல் கூடும்.* | *375* |
| *(4) 1000 ஆல் கூடும்.* | *250* |
| *(5) 1250 ஆல் குறையும்.* | *1750* |

**21)** குறையும் எல்லை விளைவு விதி தொழிற்படும் போது ….

*(1)* எல்லை உற்பத்தி, மொத்த உற்பத்தி, சராசரி உற்பத்தி என்பன வீழ்ச்சியடையும்.
*(2)* எல்லைச் செலவு, சராசரி மாறும் செலவு என்பன அதிகரிக்கும்.
*(3)* எல்லை உற்பத்தி, சராசரி உற்பத்தி அதிகரிக்கும்.
*(4)* எல்லை உற்பத்தி அதிகரிக்கும், மொத்த உற்பத்தி குறைந்த வேகத்தில் அதிகரிக்கும்.
*(5)* எல்லை உற்பத்தி வீழ்ச்சி அடையும், சராசரி மாறும் செலவு வீழ்ச்சியடையும்.

**22)** குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் வெளியீடு அதிகரிக்கின்ற போது பின்வருவனவற்றில் எது உண்மையாக இருக்க முடியாது?

*(1)* சராசரி மாறும் செலவு அதிகரிக்கும்.
*(2)* சராசரி மொத்த செலவு அதிகரிக்கும்.
*(3)* சராசரி நிலையான செலவு அதிகரிக்கும்.
*(4)* மொத்த செலவு அதிகரிக்கும்.
*(5)* எல்லைச் செலவு அதிகரிக்கும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**23)** சில சந்தை அமைப்புக்களின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – ஓரினத்தன்மை வாய்ந்த பண்டங்கள் உற்பத்தி செய்யப்படல்.

B – வேறுபடுத்தப்பட்ட பண்டங்கள் உற்பத்தி செய்யப்படல்.

C – சாதாரண கேள்விக்கோடு

D – முடிவிலி கேள்விக் கோடு

E – அதிகளவான உற்பத்தியாளர்கள்

இதில் தனியுரிமைப் போட்டிச் சந்தை ஒன்றின் பண்பாக கருதக் கூடியது.

(1) A, C மற்றும் E (2) B, C மற்றும் E (3) C, E மட்டும் (4) A மட்டும் (5) B மட்டும்

**24)** கோழிப்பண்ணை வைத்திருக்கும் ஒருவர் ஒவ்வொரு மாதமும் 3000 முட்டைகளை ஒவ்வொன்றும் ரூ 40 00 இற்கு விற்கின்றார். ஒவ்வொரு மாதமும் அவர் கோழித்தீன்களுக்காகவும் வேறு பொருள்களுக்காகவும் ரூ 20,000 உம் கோழிப் பண்ணையைப் பராமரிப்பதற்கு ஊழியர் ஒருவருக்கு ரூ.25,000 உம் செலுத்துகின்றான். அத்துடன் மாதம் ஒன்றிற்கு ரூ 10,000 இற்கு வாடகைக்கு விடக்கூடிய தனது சொந்த நிலத்தையும் தனது பண்ணையில் வேலை செய்யாது வேறெங்காவது வேலை செய்திருப்பாராயின் மாதமொன்றிற்கு ரூ 30,000 ஐ உழைத்திருக்கக்கூடிய தனது நேரத்தையும் கையாளுகின்றான். அவனது மாதாந்த சிக்கன இலாபம் யாது?

(1) 35 000 (2) 75 000 (3) 45 000 (4) 55 000 (5) 65 000

**25)** குறுங்காலத்தில் நிறுவனமொன்று எதுவித உற்பத்தியையும் மேற்கொள்ளவில்லையாயின் பின்வருவனவற்றுள் நிறுவனத்திற்கு ஏற்படும் செலவு.

(1) மொத்த மாறுஞ்செலவு (2) சராசரி மொத்தச் செலவு (3) மொத்த நிலையான செலவு

(4) எல்லைச் செலவு (5) சராசரி மாறும் செலவு

**26)** மாதம் ஒன்றிற்கு 50,000 ரூபா சம்பளம் பெறும் வணிக பட்டதாரி ஒருவர் தானே சொந்தமாக உணவகம் ஒன்றை ஆரம்பித்து முயற்சியாளரொருவராகத் தீர்மானித்ததுடன் அவர் அவ் வணிகத்திலிருந்து மாதாந்தம் ரூ 200,000 ரூபாயை வருமானமாகப் பெறுகிறார்.

இம் முயற்சியாளரின் மாற்றல் கட்டணம் மற்றும் பொருளியல் வாடகை என்பன முறையே.

(1) ரூ 200 000, ரூ 50 000 (2) ரூ 50 000, ரூ 200 000 (3) ரூ 50 000, ரூ 150 000

(4) ரூ 200 000, ரூ 250 000 (5) ரூ 200 000, ரூ 150 000

**27)** பின்வருவனவற்றுள் பொருளாதார விரிவாக்க கட்டத்தின் (expansion) பண்பாகக் கருதக்கூடியது எது?

(1) முதலீட்டாளர்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைதல்.

(2) பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி வீழ்ச்சியடைதல்.

(3) முதலீடும் வேலைவாய்ப்பும் அதிகரித்தல்.

(4) உள்ளீடுகளின் விலை அதிகரித்தல்.

(5) கைத்தொழில்களில் மிகை உற்பத்தி இயலளவு காணப்படல்.

**28)** பின்வருவனவற்றுள் எவை வருமான வட்டப்பாய்ச்சல் ஒன்றில் மெய்ப்பாய்ச்சலாக கருதப்படுகின்றது.

(1) பொருள்கள் சேவைகளுக்கான கொடுப்பனவும் காரணி வருமானப் பெறுகைகளும்.

(2) பொருள்கள் சேவைகள் கொடுப்பனவும் உற்பத்திக் காரணிகளின் வழங்கல்களும்.

(3) காரணி வருமானங்கள் பெறுகைகளும் பொருள்கள் சேவைகளும்.

(4) உற்பத்திக் காரணிகளுக்கான வழங்கல்களும் பொருள்கள் சேவைகளும்.

(5) பொருள்கள் சேவைகளுக்கான கொடுப்பனவும் பொருள்கள் சேவைகளும்.

**29)** அன்னாசி உற்பத்தியாளர் ஒருவர் தமது அறுவடையினை அன்னாசிப் பழப்பாகு உற்பத்தித் தொழிற்சாலையொன்றிற்கு ரூ 600 இற்கு விற்பனை செய்கிறார். அத் தொழிற்சாலை ரூ 1000 பெறுமதியான பழப்பாகினை ஒரு பல்பொருள் அங்காடிக்கு விற்பனை செய்கின்றது. பல்பொருள் அங்காடி நுகர்வோருக்கு ரூ 1500 இற்கு பழப்பாகினை விற்பனை செய்கின்றது.

இவ் உற்பத்திச் செய்முறையில் அன்னாசிப் பழப்பாகு உற்பத்தித் தொழிற்சாலை மற்றும் பல்பொருள் அங்காடி ஆகிய இரண்டின் மொத்தப் பெறுமதிச் சேர்க்கை யாது?

(1) ரூ 2500 (2) ரூ 3100 (3) ரூ 1500 (4) ரூ 1600 (5) ரூ 900

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**30)** பின்வருவனவற்றுள் முதன்மை வருமானத்தின் பிரதான கூறுகளைக் கொண்ட தொகுதி எது?
(1) வேலைவாய்ப்பு வருமானம், நிலையான மூலதன நுகர்வு மொத்த தொழிற்பாட்டு மிகை, நேரில் வரி.
(2) வேலைவாய்ப்பு வருமானம், மொத்த தொழிற்பாட்டு மிகை, உற்பத்தி மீதான வேறு வரிகள் கழிமானியம்.
(3) வேலைவாய்ப்பு வருமானம், தேறிய நேரில் வரி, தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானம்.
(4) மொத்த நுகர்வு, மொத்த முதலீடு, நிலையான மூலதன நுகர்வு.
(5) வேலைவாய்ப்பு வருமானம், கலப்பு வருமானம், நிலையான நுகர்வு, தேறிய நேரில் வரி.

**31)** கருதுகோள் ரீதியான பொருளாதார மொன்றின் தேசிய கணக்கீட்டுத்தரவுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன. (எல்லாத்தரவுகளும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன)

| | |
|---|---|
| தனியார் நுகர்வு | 12000 |
| தனியார் முதலீடு | 4000 |
| அரசாங்க கொள்வனவு | 3000 |
| ஏற்றுமதி வருமானம் | 1000 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 19200 |

இப் பொருளாதாரத்தின் இறக்குமதிச் செலவு யாது?
(1) ரூ -1600 மில்லியன் (2) ரூ 200 மில்லியன் (3) ரூ -200 மில்லியன்
(4) ரூ 800 மில்லியன் (5) ரூ 1600 மில்லியன்


**32)** மூடிய பொருளாதாரமொன்றின் நுகர்வுச் சார்பு C = 200 + 0.8yd ஆகும். தன்னிச்சையான வரி 100, அரச மாற்றல் செலவு 80 ஆகியவற்றை அரசு நடைமுறைப்படுத்தினால் அதன் தாக்கத்தை சீர் செய்த பின்னர் நுகர்வுச் சார்பினைக் காட்டும் விடை யாது?
(1) C = 184 + 0.8 y (2) C = 84 + 0.8 y (3) C = 184 + 0.8 yd
(4) C = 84 + 0.8 yd (5) C = 130 + 0.8 y

**33)** ஒரு பொருளாதாரத்தின் தன்னிச்சையான நுகர்வு ரூபா 400 மில்லியன் எனவும், அதன் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.2 எனவும் கருதுக. இப் பொருளாதாரத்தின் செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம் ரூ 1200 மில்லியனால் அதிகரிக்குமாயின் நுகர்வுச் செலவீட்டு அதிகரிப்பு அளவு யாது?
(1) ரூ 1600 (2) ரூ 1300 (3) ரூ 1200 (4) ரூ 960 (5) ரூ 240

**34)** மூடிய பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுச் சார்பு C = 450 + 0.75 yd, முதலீடு I = 250 அரச செலவு G = 300 மற்றும் தன்னிச்சையான வரியின் பெறுமானம் 200 எனின் மொத்த வெளிப் பாய்ச்சல்களின் பெறுமதி யாது?
(1) ரூ 350 (2) ரூ 550 (3) ரூ 250 (4) ரூ 650 (5) ரூ 400

**35)** கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் சமநிலைத் தேசிய வருமான மட்டம் y = 2500 மில்லியன் ஆகும். எல்லைச் நுகர்வு நாட்டம் 0.8 ஆகும். தன்னிச்சையான வரி 200 மில்லியன் ரூபாவால் அதிகரித்தால் சமநிலை தேசிய வருமான மட்டத்தின் மாற்றம் யாது?
(1) ரூ 200 (2) ரூ 3500 (3) ரூ 1000
(4) ரூ 800 (5) ரூ 1750

**36)** எளிய பொருளாதாரமொன்றின் சமநிலை மட்டத்தினைப் பின்வரும் வரைபடம் விளக்குகிறது.



இப் பொருளாதாரத்தில் அரசு 200 மில்லியன் ரூபாவினைச் செலவு செய்யுமாயின் பொருளாதார மாற்றங்களைக் காட்டும் சரியான சேர்க்கை எது?

| | தேசிய வருமானத்தில் மாற்றம் | நுகர்வில் மாற்றம் | சேமிப்பில் மாற்றம் |
|---|---|---|---|
| (1) | 1000 மில்லியன் | 200 மில்லியன் | 800 மில்லியன் |
| (2) | 2000 மில்லியன் | 500 மில்லியன் | 400 மில்லியன் |
| (3) | 1000 மில்லியன் | 800 மில்லியன் | 200 மில்லியன் |
| (4) | 1000 மில்லியன் | 200 மில்லியன் | 800 மில்லியன் |
| (5) | 1000 மில்லியன் | 900 மில்லியன் | 100 மில்லியன் |

**37)** தற்போது மத்திய வங்கியானது அதன் கொள்கை வட்டி விதத்தினை அதிகரிக்கும் போது பின்வருவனவற்றில் எது நடைபெறும்?
(1) பணக்கேள்வி வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
(2) பண நிரம்பல் குறைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.
(3) பண நிரம்பல் அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் குறைவடையும்.
(4) பணக்கேள்வி அதிகரிக்கும், சந்தை வட்டி வீதங்கள் நிலையாக காணப்படும்.
(5) பண நிரம்பல் அதிகரிக்கும், சந்தை வட்டி வீதங்கள் மாறாது.

**38)** அரசு பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை (VAT) அதிகரித்ததன் காரணமாக கேள்வித்தூண்டல் பணவீக்கம் மற்றும் செலவுத்தூண்டல் பணவீக்கம் என்பவற்றின் மீது ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான விளைவுகள் எவை?

| | கேள்வித் தூண்டல் பண வீக்கம் | செலவுத் தூண்டல் பணவீக்கம் |
|---|---|---|
| (1) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (2) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (3) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (4) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (5) | அதிகரிப்பு | பாதிப்பில்லை |

**39)** அண்மிய பணம் என்னும் எண்ணக்கருவினால் கருதப்படுவது?
(1) மூலதனப் பெறுமதிகள் அதிகளவில் தளம்பலுக்கு உட்படுவதனால் பணமாகக் கருதப்பட முடியாத நிதிச் சொத்துக்கள்.
(2) பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படும் அதேவேளை பெறுமானத் திரட்டாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்கள்.
(3) பெறுமானத் திரட்டாகத் தொழிற்படும் அதேவேளை பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்களாகும்.
(4) கேள்வி வைப்புகள் மீது வரையப்படும் காசோலைகளாகும்.
(5) கடன் அட்டைகளாகும்.

**40)** வங்கி முறைமையிலுள்ள ஒதுக்குகளின் அளவு ரூபா 1000 பில்லியனாகவும் வைப்புக்களின் அளவு ரூபா 8000 பில்லியன்களாகவும் பொதுமக்கள் வசமுள்ள நாணயம் ரூபா 2000 பில்லியனாகவும் காணப்படுகின்றன. இந்நிலையில் பணப்பெருக்கியின் அளவு யாது?
(1) 0.30 (2) 0.37 (3) 2.7 (4) 2.95 (5) 3.33

**41)** பொருளாதாரமொன்றின் பெயரளவு மொத்த தேசிய உற்பத்தி 8000 பில்லியன் ரூபாவாகவும் பணநிரம்பல் 2000 பில்லியன் ரூபாவாகவும் இருந்தால் பணத்தின் சுழற்சி வேகம் யாது?
(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (5) 6


(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**42)** வணிக வங்கிகளின் சொத்துப் பொறுப்புக் கட்டமைப்பில் இரண்டாம் தர ஒதுக்கு வகையைச் சார்ந்தது எது?
(1) கையாலுள்ள காசு (2) அரச பிணைப்பத்திரம் (3) வெளிநாட்டுப்பணம்
(4) தளபாடங்கள் (5) வங்கிக் கடன்கள்

**43)** கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பண நிரம்பல் (M) 2400 மில்லியன் எனவும் மொத்த வங்கி வைப்புக்கள் (D) 1600 பில்லியன் எனவும் தேவைப்படும் ஒதுக்கு வைப்பு வீதம் 10 % எனவும் மிகை ஒதுகளைப் பேணவில்லை எனவும் கருதுக. மத்திய வங்கி வணிக வங்கிகளிடமிருந்து 100 பில்லியன் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யமாயின் பின்வருவனவற்றுள் சரியானது.
(1) பணநிரம்பல் 7.5 மில்லியனால் அதிகரிக்கும்.
(2) பணநிரம்பல் 250 மில்லியனால் அதிகரிக்கும்.
(3) பணநிரம்பல் 200 மில்லியனால் அதிகரிக்கும்.
(4) பணநிரம்பல் 100 மில்லியனால் அதிகரிக்கும்.
(5) பணநிரம்பல் 150 மில்லியனால் அதிகரிக்கும்.

**44)** தற்போது இலங்கை மத்திய வங்கியானது பணக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பிரதான நோக்கங்கள் யாவை?
(1) விலை உறுதிப்பாடும் நிதி முறைமையின் உறுதிப்பாடும்.
(2) விலை உறுதிப்பாடும் நிறைதொழில் மட்டமும்.
(3) விலை உறுதிப்பாடும் பேண்தகு அபிவிருத்தியும்.
(4) நிறை தொழில்மட்டமும் அதிகளவு வருமான சமபங்கீடும்.
(5) விலை உறுதிப்பாடும் அரசாங்கப் பொதுப்படுகடன் சுமையைக் குறைத்தலும்.

**45)** குறித்த பண்டத்தின் எல்லைச் சமூக நன்மை, எல்லைத் தனிப்பட்ட நன்மை, எல்லைச் சமூகச் செலவு, எல்லைத் தனிப்பட்ட செலவு தொடர்பான வரைபு வருமாறு.




மேலே காட்டப்பட்ட வரைபிற்குரிய பண்டம் எது?
(1) மேன்மைப் பண்டம் (2) மேன்மையல்லாப் பண்டம் (3) பொதுப்பண்டம்
(4) அரைகுறைப் பொதுப்பண்டம் (5) தீய பண்டம்

**46)** பின்வருவனவற்றுள் அரச தோல்விக்கான காரணமாக கருதப்படுவது எது?
(1) அரச பொருள்கள் மற்றும் சேவை உற்பத்திகளின் விளைவாக எதிர்க்கணிய வெளிவாரிகள் ஏற்படல்.
(2) தீங்கிழைக்கும் பொருள்களின் மிகையான நுகர்வு.
(3) வருமானம் மற்றும் செல்வம் என்பவற்றின் சமமற்ற பங்கீடு.
(4) சந்தைகளில் நிறைவில் போட்டி நிலவுகின்றமை.
(5) அரசியல் சுயலாபம்.

**47)** தற்போது இலங்கை அரசாங்கத்தின் மீண்டெழும் செலவீனங்களின் மிகப்பெரிய கூறாக அமைவது.
(1) வட்டிச் செலுத்தல்கள். (2) சம்பளங்களும் கூலிகளும்.
(3) ஓய்வூதியம் செலுத்தல்களும். (4) உரமானியம்
(5) அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றங்களாகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**48)** பொதுப்பொருள்கள் சந்தை முறையினால் வழங்கப்படாதிருக்கக் காரணம்.
(1) நுகர்வின் போது செலவொன்று ஏற்பட்ட போதிலும் இலாபம் உழகைக்க முடியாமையாகும்.
(2) விலை அறவிட முடியாமை மற்றும் நுகர்வில் போட்டித்தன்மை காணப்படாமையாகும்.
(3) விலை செலுத்தாதோரை நுகர்விலிருந்து விலக்க முடியாமை மற்றும் நுகர்வில் போட்டித்தன்மை காணப்படாமையாகும்.
(4) இலாபம் உழைக்க முடிந்தபோதிலும் நுகர்வின்போது செலவொன்று ஏற்படுவதனாலாகும்.
(5) விலை அறவிட முடியுமாயினும் அதனை இலகுவில் செயற்படுத்திட முடியாமையாகும்.

**49)** பின்வரும் அட்டவணையானது அனல் மின் நிலையம் ஒன்றை அமைப்பதனால் ஏற்படும் தனியார் மற்றும் வெளிவாரி செலவுகள் மற்றும் நன்மைகளைக் காட்டுகின்றது.

| **விடயம்** | **ரூபா (மில்லியன்)** |
|---|---|
| தனியார் நன்மை | 180 |
| தனியார் செலவு | 190 |
| வெளிவாரி நன்மை | 110 |
| வெளிவாரி செலவு | 140 |

சமூகச் செலவீட்டிலிருந்து சமூக நன்மையைக் கழித்தால் வருவது,
(1) ரூ 120 மில்லியன் (2) ரூ 50 மில்லியன் (3) ரூ 40 மில்லியன்
(4) ரூ 30 மில்லியன் (5) ரூ 10 மில்லியன்

**50)** இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக அரசாங்க வருமானமும் அரசாங்கச் செலவினமும் அண்மைய ஆண்டுகளில் (2022) அண்ணளவாகப் பின்வருமாறு காணப்பட்டன.

| | **வருமானம் (மொத்த.உ.உ. விகிதம் %)** | **செலவீனம் (மொ.உ.உ. விகிதம் %)** |
|---|---|---|
| (1) | 15 – 16 | 25 – 26 |
| (2) | 12 – 13 | 24 – 25 |
| (3) | 8 – 9 | 18 – 19 |
| (4) | 9 – 10 | 20 – 21 |
| (5) | 10 - 11 | 18 - 19 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## $4^{th}$ Term Examination - 2023

NFWC

| | | | | |
|---|---|---|---|---|
| **பொருளியல் - II**<br>**Economics - II** | **Three Hours**<br>**Gr -13 (2023)** | **21** | **T** | **II** |

❖ **அறிவுறுத்தல்கள் :**

❖ **இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க.**

**. பகுதி II**

**உபபிரிவு "அ"**

**01)**

(01) பொருளாதார வளங்களுக்கும் பொருளாதாரப் பொருள்களுக்கும் இடையிலான தொடர்பை விளக்குக. (04 புள்ளிகள்)

(02) உற்பத்திக் காரணிகள் எனும் வகையில் நிலம், உழைப்பை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(03) பின்வரும் நிகழ்வுகளை உற்பத்தி இயல்தகவு வளையி வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக.

i. அன்னியச் செலாவணி பற்றாக்குறையினால் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி இறக்குமதிப் பதிலீடுகளின் உற்பத்தி காரணமாக வளப்பயன்பாடு அதிகரித்தல்.

ii. கோவிட் – 19 க்குப் பின் அனைத்து துறைகளும் இலத்திரனியல் தொழில்நுட்ப முறைக்கு மாற்றமடைந்தமையால் ஊழிய வினைத்திறன் அதிகரித்தல்.

iii. பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீட்சியடைதல்.

iv. நாட்டில் வெளிநாட்டு முதலீடு குறைவடைதல். (08 புள்ளிகள்)

(04) வளங்களின் உடைமை மற்றும் உரிமை அடிப்படையிலும், தீர்மானமெடுத்தல் பொறிமுறை அடிப்படையிலும் பொருளாதார முறைமைகளை வகைப்படுத்தி அவற்றின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**02)**

(01) கேள்வி நீட்டம் என்றால் என்ன?
வருமான விளைவு, பதிலீட்டு விளைவு, கேள்வி நீட்டத்தை எவ்வாறு பிரதிபலிக்கின்றது. (04 புள்ளிகள்)

(02) நிரம்பல் விதி என்றால் என்ன?
குறைவான விலையிலும் பார்க்க உயர்வான விலைகளில் நிரம்பல் செய்யப்படும் அளவு அதிகரிப்பது ஏன்? (04 புள்ளிகள்)

(03) a) X, Y, Z எனும் பண்டங்களுக்கான நெகிழ்ச்சிப் பெறுமானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- X, Y பண்டங்களுக்கான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி +2.5
- Z பண்டத்துக்கான வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி – 1.2

மேலே தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய X, Y பண்டங்கள் மற்றும் Z பண்டங்களை வகைப்படுத்துக. (02 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

b) தேங்காய் ஒன்றின் விலை ரூ 50 இலிருந்து ரூ.60 ஆக அதிகரிக்கும் போது நிரம்பல் தொகை 200 இலிருந்து 400 ஆக அதிகரித்தது. வில் நெகிழ்ச்சி முறையில் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி குணகத்தை கணிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

*(04)* குறித்த ஒரு பண்டத்தின் சமநிலை விலை 50 ரூபாவாக இருப்பதுடன் சமநிலைத் தொகை 800 அலகுகள் ஆகும். சமநிலை விலையில் நுகர்வோர் மிகை 3200 ரூபாவாகவும் உற்பத்தியாளர் மிகை 16000 ரூபாவாகவும் ஆகும்.

i. இப் பண்டத்தின் கேள்வி நிரம்பல் வளையிகளை வரைபில் காட்டுக. *(02 புள்ளிகள்)*

ii. இப் பண்டத்தின் ஓர் அலகிற்கு அரசு 12 ரூபா வரி விதித்தது.

a) வரியின் பின் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளர் மிகை காண்க. *(02 புள்ளிகள்)*

b) அரசுக்கு கிடைக்கும் வரி வருமானத்தைக் காண்க. *(02 புள்ளிகள்)*

c) மிகை வரிச் சுமை யாது? *(02 புள்ளிகள்)*

**03)**

*(01)* நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகையை வேறுபடுத்துக. *(04 புள்ளிகள்)*

*(02)* உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலையினால் தோன்றும் விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தக் கூடிய விலை சாரா பங்கீட்டு முறைகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

*(03)* குறித்த ஒரு பண்டத்தின் சந்தைக் கேள்வி, சந்தை நிரம்பல் சமன்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

$Qd = 1000 - 20p$

$Qs = 200 + 20p$

இப் பண்டத்திற்கு அரசு ரூ.30 சத்தரவாத விலையை நிர்ணையிப்பதுடன் மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்யும் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக கருதுக.

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

i. சமநிலை விலை, சமநிலைத் தொகை. *(02 புள்ளிகள்)*

ii. அரசினால் உற்பத்தி மிகை கொள்வனவு செய்யப்படின் நுகர்வோன் மிகை, உற்பத்தியாளர் மிகை. *(02 புள்ளிகள்)*

iii. உற்பத்தியாளன் மிகையால் ஏற்படும் மாற்றம். *(02 புள்ளிகள்)*

iv. மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்வதன் மூலம் அரசினால் பொறுப்பேற்க வேண்டிய செலவு. *(02 புள்ளிகள்)*

v. அரசு உத்தரவாத விலையை நிர்ணையிப்பதன் மூலம் இழக்கப்படும் சமூக நலச் செலவின் பெறுமானம். *(02 புள்ளிகள்)*

**04)**

*(01)* குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியினையும் குறையும் அளவுத்திட்ட விளைவு விதியினையும் வேறுபடுத்துக. *(04 புள்ளிகள்)*

*(02)* உற்பத்தித் தொழிற்பாட்டில் குறுங்கால உற்பத்தித் தொழிற்பாடு, நீண்டகால உற்பத்தித் தொழிற்பாடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விளக்குக. *(04 புள்ளிகள்)*

*(03)* கீழுள்ள அட்டவணை நிறுவனமொன்றின் மொத்தச் செலவு மற்றும் எல்லைச் செலவுகளைக் காட்டுகின்றது.

| வெளியீடு (Q) | மொத்தச் செலவு (TC) | எல்லைச் செலவு (MC) |
|---|---|---|
| 1 | 200 | 20 |
| 2 | 215 | 15 |
| 3 | 225 | 10 |
| 4 | 240 | 15 |
| 5 | 260 | 20 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

i. சராசரி மாறும் செலவின் பெறுமானங்களை கணிப்பிடுக. (02 புள்ளிகள்)
ii. சராசரி மொத்தச் செலவின் (ATC) பெறுமானங்களை கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(04) கணக்கியல் இலாபம் பொருளியல் இலாபத்தை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(05) அளவுத்திட்டச் சிக்கனமின்மை என்றால் என்ன? அளவுத்திட்டச் சிக்கனமின்மை தோன்றுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**05)**

(01) நிறைபோட்டிச் சந்தைக்கும் தனியுரிமைப் போட்டிச் சந்தைக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(02) தனியுரிமைச் சந்தையில் பிரவேசத் தடை ஏற்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(03) பின்வருவன எச் சந்தை அமைப்புக்களுக்குப் பொருத்தமானவை?
அ) பூசணி
ஆ) மின்சார வழங்கல்
இ) அழகுக்கலை நிலையம்
ஈ) சமையல் எரிவாயு (04 புள்ளிகள்)

(04) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் கேள்விக் கோடு முடிவிலி நெகிழ்ச்சியைக் கொண்டிருப்பதற்கான காரணம் யாது? (04 புள்ளிகள்)

(05) நிறைபோட்டி நிறுவனமொன்றினது 10 அலகு வெளியீட்டின் போது சராசரி நிலையான செலவு (AFC) ரூ 15 ஆகவும் மொத்தச் செலவு (TC) ரூ.450 ஆகவும் அமைகின்றது. வெளியீடு 20 அலகுகளால் அதிகரிக்கும் போது எல்லைச் செலவு ரூபா 75 ஆகும்.
i. 30 ஆவது வெளியீட்டுக்கான சராசரி மாறும் செலவு (AVC) யாது? (02 புள்ளிகள்)
ii. 30 ஆவது வெளியீட்டு மட்டத்தில் மொத்த மாறும் செலவு யாது? (02 புள்ளிகள்)

## உபபிரிவு "ஆ"

❖ **இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க.**

**06)**

(01) பின்வருவன ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படுமா இல்லையா என்பதனை விளக்குக.
i. கம்பனி முறிகளிலிருந்து கிடைத்த வட்டி வருமானம்.
ii. வறியவர்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு.
iii. முல்லைத்தீவில் உள்ள சைவ உணவகம் ஒன்று விவசாயி. ஒருவரிடம் ரூ.10 000 பெறுமதியான மரக்கறிகளை கொள்வனவு செய்தல்.
iv. அடுக்குமாடிக் குடியிருப்பொன்றை வாடகைக்கு விட்டதன் மூலம் பெற்ற வருமானம்.
v. விவசாயி ஒருவர் அருகில் உள்ள வனத்தில் வேட்டையாடி 10000 ருபா பெறுமதியான இறைச்சியை சேகரித்தல். (1 x 5 = 05 புள்ளிகள்)

(02) மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பதனை விளக்குக. (06 புள்ளிகள்)

(03) உற்பத்தி வழியில் தேசிய கணக்கீட்டினைச் செய்யும் போது ஏற்படும் பல் கணிப்பீட்டுப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்வதற்கான இரண்டு முறைகளையும் புள்ளி விபரங்கள் ஊடாக விளக்குக. (04 புள்ளிகள்)

(04) 2022 ஆம் ஆண்டின் கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன. (எல்லாப் பெறுமானங்களும் பில்லியன் ரூபாக்களில்…)
மொத்த உள்நாட்டுச் செலவு = 2600
மொத்த உள்நாட்டு உற்பத்தி = 2200

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் = -1000
வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றங்கள் = 1500
நிலையான மூலதன நுகர்வு = 500
தேறிய நேரில் வரி = 1200
நுகர்வுச் செலவு = 1800
உள்ளார்ந்த விலைச் சுருக்கி (2013 = 100) = 350
பின்வருவனவற்றை கணிப்பிடுக.

1. தேறிய ஏற்றுமதி
2. செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம்
3. உள்நாட்டு சேமிப்பு
4. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை. (1 x 5 = 05 புள்ளிகள்)

**07)**

(01) பின்வரும் ஒவ்வோர் விடயமும் மொத்தச் செலவீட்டின் எக்கூறுக்களுக்கு உரியது என இனங்காண்க.

i. புதிய வீடொன்றை நிர்மாணித்தல்.
ii. கடந்த ஆண்டுக்குரிய மட்டத்திலும் பார்க்க தளபாட இருப்புக்கள் அதிகரித்துள்ளமை.
iii. வேலையற்ற பட்டதாரிகளை அரசாங்க சேவைக்கு ஆட்சேர்க்கப்படுதல்.
iv. குடும்பமொன்று ஒரு மணித்தியால சட்ட ஆலோசனையைப் பெற்றமைக்கான கட்டணத்தைச் செலுத்துதல். (04 புள்ளிகள்)

(02) சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்பதனால் கருதப்படுவது யாது? திறந்த பொருளாதாரமொன்றின் தேசிய வருமானச் சமநிலை மட்டத்தை அடையத் தேவையான நிபந்தனைகள் யாவை? (04 புள்ளிகள்)

(03) பின்வரும் மாதிரியானது அரசாங்கத்துறையிலுள்ள மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்தைப் பிரதிநிதிப்படுத்துவப்படுத்துகின்றது.

தனியார் நுகர்வு (C) = 200 + 0.9 yd
முதலீடு (I) = 180
அரசாங்க செலவீடு (G) = 300
வரிகள் (T) = 120
பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

i. தேசிய வருமான சமநிலை மட்டம்.
ii. முதலீடு ரூ 50 மில்லியனால் அதிகரிக்குமாயின் சமநிலை தேறிய வருமான மட்டம் யாது?
iii. முதலீட்டுப் பெருக்கியின் பெறுமானம் யாது?
iv. நிறைதொழில் மட்ட தேசிய வருமானம் ரூபா 6500 மில்லியனாக இருப்பதற்கு அப்பொருளாதாரத்தில் முதலீடு எவ்வளவால் அதிகரிக்க வேண்டும்.

(2 x 4 = 08 புள்ளிகள்)

(04) எளிய முதலீட்டுப் பெருக்கியானது தேசிய வருமானத்தை தீர்மானிப்பதில் எத்தகையை செல்வாக்கினைக் கொண்டுள்ளது? சதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக. (04 புள்ளிகள்)

**08)**

(01) அண்மிய பணத்திற்கு பணப்பதிலீடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(02) உயர் வலுப்பணம் என்பதனால் கருதப்படுவது யாது? உயர்வலுப் பணத்தின் பிரதான கூறுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(03) வட்டி வீதத்திற்கும் பணக் கேள்விக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (04 புள்ளிகள்)
(04) பணக் கணியக் கோட்பாடு என்றால் என்ன? (04 புள்ளிகள்)
(05) கேள்வித் தூண்டல் பண வீக்கத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**09)**

*(01)* மத்திய வங்கியின் அடிப்படைத் தொழிற்பாடுகள் 4 ஐக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

*(02)* வணிக வங்கியின் இரண்டு முரண்பட்ட குறிக்கோள்களை விளக்குக. *(04 புள்ளிகள்)*

*(03)* இலங்கையில் நிதிமுறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுவதில் துணைநில் வீத செல்வழியின் (Standing rate Corriodor) வகிபாகத்தை விளக்குக. *(04 புள்ளிகள்)*

*(04)* ஒரு நாட்டின் வர்த்தக வங்கி முறைமையினுள் இயங்கும் வர்த்தக வங்கியொன்றின் எளிமைப்படுத்தப்பட்ட ஐந்தொகை பின்வருமாறு.

| பொறுப்புக்கள் | பெறுமதி (பில்லியன் ரூபா) | சொத்துக்கள் | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| வைப்புக்கள் | *200 000* | தேவைப்படும் ஒதுக்குகள் | *20 000* |
| பங்குடமையாளரின் மூலதனம் | *50 000* | மிகை ஒதுக்குகள் | *10 000* |
| | | பிணைசார் | *60 000* |
| | | கடன்கள் | *160 000* |
| | *250 000* | | *250 000* |

i. தேவைப்படும் ஒதுக்கு வீதம் யாது? *(02 புள்ளிகள்)*

ii. இவ் வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் ரூபா *10 000* மில்லியனை வங்கியில் வைப்புச் செய்தால் வங்கியின் ஒதுக்குகள் எந்த அளவினால் மாற்றமடையும்? *(02 புள்ளிகள்)*

iii. தேவைப்படும் ஒதுக்கு வீதம் மாறாதிருக்கும் போது ரூ *10 000* பணம் வைப்பிலிடப்பட்ட பின்னர் இவ்வங்கியானது வழங்கக் கூடிய புதிய கடனின் *200* அளவு யாது? *(02 புள்ளிகள்)*

iv. புதிய கடன் வழங்கிய பின்னர் ஐந்தொகையை வரைந்து காட்டுக. *(02 புள்ளிகள்)*

**10)**

*(01)* பின்வரும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

i. நுகர்வில் போட்டிக்குரியதும் பணக் கொடுப்பனவை செலுத்தக்கூடியவர்களுக்கு மட்டும் நுகர்வை வரையறுக்கக் கூடியதுமான ஒரு பண்டம்.

ii. நுகர்வில் போட்டிக்குரியது அல்லாததும் பணக்கொடுப்பவை செலுத்தக் கூடியவர்களுக்கு மட்டும் நுகர்வை வரையறுக்கக் கூடியதுமான ஒரு பண்டம்.

iii. நுகர்வில் போட்டிக்குரியது அல்லாததும் பணக் கொடுப்பனவை செலுத்தக் கூடியவர்களுக்கு மட்டும் நுகர்வை வரையறுக்க முடியாததுமான ஒரு பண்டம்.

iv. நுகர்வில் போட்டிக்குரியதும் பணக் கொடுப்பனவை செலுத்தக் கூடியவர்களுக்கு நுகர்வை வரையறுக்க முடியாததுமான ஒரு வளம்.

*(02)* சுந்தைத் தோல்வி என்றால் என்ன? சந்தைத் தோல்வியின் வகைகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

*(03)* ஒரு தாராள சந்தையானது ஏன் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளைக் கொண்ட பொருட்களை அளவுக்கதிகமாக உற்பத்தி செய்கின்றது? பொருத்தமான வரைபடமொன்றைப் பயன்படுத்தி உமது விடையினை விளக்குக? *(04 புள்ளிகள்)*

*(04)* ஒரு நாட்டுக்கு வரிகள் ஏன் அவசியம் என்பதை குறிப்பிட்டு நல்ல வரியொன்றின் விரும்பத்தக்க பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

*(05)* இறைக் கொள்கையானது வருமானச் சமமின்மையை நீக்கக்கூடிய வழிவகைகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*